இந்து தமிழ் திசை

# திருச்சி ஐஐஎம் 14-வது ஆண்டு நிறுவன தினம்

■ திருச்சி

திருச்சி ஐஐஎம் நிறுவனத்தில் 14-வது ஆண்டு நிறுவன தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியை திருச்சி ஐஐஎம் இயக்குநர் பவன்குமார் சிங் தொடங்கிவைத்தார்.

லார்சன் டூப்ரோ நிறுவனத்தின் இஐஓ கோபி தங்கவேல் பேசியபோது, "35 நாடுகள் மற்றும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஐஐஎம் முன்னாள் மாணவர்கள் செலுத்தி வருகின்றனர். குறிப்பிடத்தக்க பங்களிப்பை திருச்சி ஐஐஎம் தர வேண்டும்" என்றார். பெங்களூரு ஐஐஎம் இயக்குநர் ரிஷிகேஷா டி.கிருஷ்ணன் பேசியபோது, "அறிவுசார் உட்கட்டமைப்புதான் ஐஐஎம்களின் பரிணாம வளர்ச்சிக்கான காரணமாக உள்ளது. லட்சியத்தை நிர்ணயித்து செயல்படவேண்டும்" என்றார். 'ஒருவித்தியாசத்தை உருவாக்கு' என்னும் திட்டத்தில் சாதனையாளர்கள் பாராட்டப்பட்டனர்.

**Source: Hindu Tamil**

**Date: 06/01/2025**

**Page No: 03**